**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.87** **நாள் : 29.05.2024**

**சென்னை மாநகரில் கரிம உமிழ்வின் தாக்கத்தினை குறைக்கும் பொருட்டு, காலநிலை முதலீட்டு வாய்ப்புகள் கண்டறியும் (Climate Investment Opportunities Diagnostic) அறிக்கைக்கான கருத்துப் பட்டறை சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கூடுதல் தலைமைச் செயலாளர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று நடைபெற்றது.**

சென்னை மாநகரில் 2050ஆம் ஆண்டிற்குள்ளாக கரிம உமிழ்வின் தாக்கத்தினை குறைக்கும் பொருட்டு, பெருநகர சென்னை மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு நடவடிக்கைகளில் ஒன்றான காலநிலை முதலீட்டு வாய்ப்புகள் கண்டறியும் (Climate Investment Opportunities Diagnostic) அறிக்கைக்கான கருத்துப் பட்டறை சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், கூடுதல் தலைமைச் செயலாளர்/பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (29.05.2024) ரிப்பன் கட்டட வளாக அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், 2050ஆம் ஆண்டுக்குள் கரிமஉமிழ்வு சமநிலை அடைவதை இலக்காகக் கொண்டு, காலநிலை நடவடிக்கை திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை அடிப்படையாகக் கொண்டு, பெருநகர சென்னை மாநகராட்சி தனது காலநிலை நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி, நகரத்தின் முதலீட்டுத் தேவைகளை அடையாளம் காணவும் மற்றும் நிலையான காலநிலை முயற்சிகளை ஆதரிக்க நிதியைப் பெறவும் நகரத்தின் காலநிலை முதலீட்டு வாய்ப்புகளுக்கான நுண்ணறிவு ஆய்வு மேற்கொள்கிறது.

சென்னைக்கு காலநிலை முதலீட்டு வாய்ப்புகளை மதிப்பீடு செய்வதற்காக, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இணைத் துறைகளான தமிழ்நாடு எரிசக்தி மேம்பாட்டு நிறுவனம் (TEDA), சென்னை ஒருங்கிணைந்த பெருநகர போக்குவரத்து ஆணையம் (CUMTA), சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம் (CMWSSB), தமிழ்நாடு மின்பகிர்மானக் கழகம் (TANGEDCO) உள்ளிட்ட மேலும் பல துறைகளிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டு ஒரு அடிப்படை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதன் தொடர்ச்சியாக, பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் இணைத் துறைகளின் அலுவலர்களுக்கு இரண்டு நாட்களுக்கான கருத்துப் பட்டறை இன்று தொடங்கி நடைபெற்றது. இக்கருத்துப் பட்டறையினை தமிழ்நாடு அரசின் சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும்

வனத்துறையின் கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி சுப்ரியா சாகு இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம் மற்றும் வனத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அவர்கள் காலநிலை திட்டங்கள் மூலம் மின்கழிவுகள் மற்றும் பிளாஸ்டிக்குகளை மறுசுழற்சி செய்வதில் உள்ள வாழ்வாதார வாய்ப்புகள் குறித்து வலியுறுத்தினார்.

கூடுதல் தலைமைச் செயலாளர்/ஆணையர் அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் மாமன்ற உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்களுக்கு காலநிலை நடவடிக்கைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் ஒரு கருத்துப் பட்டறை நடத்தப்படும் எனவும், தொடர்புடைய துறைகளுடன் இணைந்து செயல்படுவதன் முக்கியத்துவம் குறித்தும், மேலும் ஊடகங்கள் மூலம் காலநிலை மாற்றம் குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்துவதன் முக்கியத்துவம் குறித்தும் வலியுறுத்திப் பேசினார்.

இக்கூட்டத்தில் கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர். லலிதா, இ.ஆ.ப., இணை ஆணையாளர் (பணிகள்) டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., துணை ஆணையாளர் (கல்வி) திருமதி ஷரண்யா அறி, இ.ஆ.ப., மற்றும் சர்வதேச நிதி நிறுவன காலநிலையின் பசுமைக் கட்டடங்கள் மற்றும் நகரங்களுக்கான தலைமை தொழில் நிபுணர் திரு.பிரசாந்த் கபூர், செயல்பாட்டு அலுவலர் திருமதி லொரைன் சுகர் *(Lorraine Sugar)*, நகர மேலாளர் திருமதி ஃபைசா சொலங்கி *(Faiza Solanki)* மற்றும் சர்வதேச நிதி நிறுவன அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி**